Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2 } 1912௵ ஜனவரி௴ 15௳ விரோதகிருது௵ தை௴ 2௳ { பகுதி 9

டி. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

ஸந்மார்க்கமுறையும் ஸம்ஸாரியும்—ப. நா.		௨௯௭
காயத்ரீ இராமாயணம்—பி. எஸ். சுப்பிரமணியஐயர்		௩௦௫
சமதி என்னும் உத்தமியின்சரித்திரம்—எஸ். சாமிநாதையர்		௩௧௩
காலஞ்சென்ற கனந்தங்கிய வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள்	பத்திராதிபர்	௩௧௭
ஸ்ரீமாந் பி. எஸ். ராஜகோபாலையர் B. A. B. L., F. T. S. அவர்களின் மரணம்.	ஷை	௩௨௧
காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம்.	பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்	௩௨௨
சமாசாரம்—பத்திராதிபர்		௩௨௮
பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.		

The Swadeshi Life Assurance Co., Ltd., BOMBAY.

ஹெட் ஆபீஸ் பம்பாய்,

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷ்ம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மேன்.

மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A. F. I. A. (London) } ஆக்சுவரி

K. சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A. F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் F. M. U. F. B. U. பம்பாய் } மானேஜர்.

எம். கே. இராஜகோபாலசாரியார் அவர்கள் F. T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R. Chari Brothers" West Tower Street, Madura. } சென்னைராஜதானியின் சீப் ஏஜண்டு, Chief Agents.

எல். புருஷோத்தமநாயுடுகாரு F. T. S. எடமணல், சீயாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to

Messrs. K. R. CHARI BROTHERS,

West Tower Street, Madura.

321

321

322

Supplement to the "Poorna Chandrodayam"



காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி அய்யர், ஸி. எஸ். ஐ.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2 { 1912வு ஜனவரிமீ 15உ
விரோதகிருதுவு தைமீ 2உ } பகுதி 9.

ஸந்மார்க்க முறையும், ஸம்ஸாரியும்.

(293-ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது சந்மார்க்க முறையை அநுஷ்டிக்க வேண்டுமாயின் காடுகளுக்குச் சென்று, குகைகளிலும் மடங்களிலும் வசித்தால்தான் இயலும் என்ற அபிப்பிராயம் இத்தேசத்தில் தற்காலத்தில் நிகழா விடினும், லௌகிக முறையையும் சமயமுறையையும் ஒன்றாகக் கலக்கக்கூடாது, இரண்டும் பிரத்தியேகமானவைகள் என்ற அபிப்பிராயம் இக்காலத்தில் அதிகமாக நடைபெறுகின்றது. இது சரியானதன்று என நான் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். இத்தேசத்தில் புண்ணிய விஷயம் வேறு, உலக விஷயம் வேறு என்ற அபிப்பிராயம் நவீநமானது. ஞாயிற்றுக்கிழமை ஈசுவரனுக்கு உரித்தான நாளென்றும் மற்றைய நாட்கள் அல்லவென்றும் இந்நாட்டில் என்னுகிறார்கள். அதனால் ஈசுவர கைங்கரியத்திற்குரித்தான நாள் ஞாயிற்றுக்கிழமையெனக் கொண்டாடுகிறார்கள் ஒரு கிழமைக்கு ஈசுவரனின் உரிமையை ஏற்படுத்தியும், வாரத்தின் மற்ற 6 கிழமைகளுக்கும் அவ்வுரிமையை மறுத்தும், அதாவது, வாழ்நாளில் 6 பாகங்களை ஞாந முறைக்குப் புறம்பாக வைத்தும் ஒரு பாகத்தை மாத்திரம் தனியாகப் பிரித்துச் சந்மார்க்கத்திற் குரித்தானதென்று ஏற்படுத்தல் போலவாகும். அதனால்தான் சாதாரண ஜநங்கள் வசநத்தில், புண்ணிய

சரித்திரமென்றும், பாபமான லௌகிக சரித்திரமென்றும், சமய முறைக்கல்விப்பயிற்சி யென்றும், லௌகிகப் படிப்பென்றும் இவை போன்ற மொழிகள் வழங்குகின்றன. இம்மொழிகளால் ஜநங்களுடைய மநம் மதிமயங்கி, ஆன்ம விஷயத்தைப்பற்றியும் உலக விஷயத்தைப்பற்றியும் தப்பான அபிப்பிராயம் நிகழ்கிறது. சரியான அபிப்பிராயம் யாதெனில், ஆன்மாவென்றால் பிராணன். உலகமென்றால் உடல். உடலானது உயிரின் வெளித்தோற்றம். உயிரின்றிஉடல் சவமாகும். உடலின்றி உயிர் வாழ்வும் இயலாது. அதாவது உயிர் செயலற்றிருக்கும். இதைப்பற்றி விஸ்தாரமாக உண்மையான அபிப்பிராயங்களை உங்கள் முன்னர் தெரிவிக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். உலகம் என்றால் ஈசுவர ஸங்கல்பம். ஈசுவரனுடைய மநத்தின் சங்கல்பரூபமாக உலகம் பரிணமித்துத் தோன்றுகிறது. பலனுள்ள எல்லாக் கிரியைகளும் ஈசுவரச் சங்கற்பத்தின் பல பரிணாமங்களாம். உலகமென்ற சக்கரங்களை ஈசுவரன் சுழலச் செய்கிறார். மனிதர்களோ, அச்சக்கரங்களின் விளிம்புகளை ஸ்பரிசிக்கும் அவரது கரங்களாம். உலகில் நடத்தப் பெறும் எல்லாச் செயலும் அவரது கர்மமாம். மனிதனுக்கு உதவிபுரியும் ஒவ்வொன்றும், உலகக்கிரியைகளைக் கொண்டுசெலுத்தும் ஒவ்வொன்றும் ஈசுவரனது கிரியையென்றறிதலே உண்மையான அறிவு. அப்படியில்லாமல் லௌகிகமானவைகளென்றும் பாபமானவைகளென்றும் பிரித்து மதித்தல் அறிவீனமாம். நாணயசாலையில் தொழில் செய்யும் பெரிய வியாபாரியும், பெட்டியடியிலிருக்கும் சிறு வியாபாரியும், வைத்தியசாலையில் தொழில் செய்யும் வைத்தியனும், ஆகாயத்தின்கண் வாநசாஸ்திரத்தைப்பயிலும் ஜோதிஷசாஸ்திரியும், ஞாநத்தைஉபதேசிக்கும் குருவைப்போலவே எல்லாரும்ஈசுவரகைங்கர்யத்தில்ஈடுபெற்றவராவர். இவ்விதமாக உலகத்தில் நடைபெறும் தொழிலை யறியவேண்டும். உலகத்தொழிலைக்கீழ்க்கடையில்வைத்து மதித்தல் அறிவின்மையேயாம். ஒரேபிராணன் எங்கும் உளதென்றும், எல்லாவஸ்துக்களும் அந்தஒரேபிராணனின் அதிஷ்டாநத்தை உடையனவென்றும்நாமறியவேண்டும். இன்றேல், நமதுமநோபாவத்தில்நாம்மோசம்போனவராவோம்; ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் இயங்குகிற பிராணன்ஒன்றேயென்றும், எல்லா வஸ்துக்களுக்கும் அவ்

வொரே பிராணனின் பல ரூபங்களென்றும் அறியும் திவ்ய ஞானத்தைக் கிரஹிக்காமல் கண் குருடர்களாக நம்மையாக்கிக்கொள்வோம்.

4. ஈசுவரன் எங்கும் பரந்துளன், ஸர்வாந்தர்யாமி. நீங்களும் ஓரே பிராணனின் அம்சங்கள். ஈசுவரனின் ஒரு சங்கற்பமே, உலகங்களைப் படைப்பதும் காப்பதுமாம். வெளிப்படாத ஈசுவரசக்தி எவ்வளவோ அபாரமானதாக இருக்கின்றதுதான். கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் "யான் இப்பிரபஞ்சம் முழுவதையும் ஒரு அம்சத்தினால் சிருஷ்டித்துத் தாங்கி நிற்கின்றேன்" என்று உபதேசித்த பிரகாரம், ஈசுவரன், சிருஷ்டியின்* அளவிலன் அதைக் கடந்தவன். ஆயினும், வியக்தப்பட்டிருக்கிற பிரபஞ்சம் ஈசுவரத்தன்மையது. ஈசுவர அம்சம் அது என்பதில் யாதொரு சந்தேகமுமின்றே! அவர் எங்கும் இருக்கிறார், ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ளார், அதனால் †தூணிலும் உள்ளார், துரும்பிலும் உள்ளார். வனிகர் சாலையிலும், மலையிலும், நாட்டிலும், காட்டிலும், ஜநக்கூட்டத்திலும், குகையின் ஏகாந்தத்திலும், அவர் ஓரே மாதிரியாக இருக்கின்றார். அவர் மஹிமையைப், பனிக்கட்டிகள் உறைந்திருக்கும் மலைகளின் பிரகாசத்திலும், மரங்கள் அடர்ந்த கண்ணுழையா வநத்தின் காம்பீரியத்திலும், மனிதன் ஸஞ்சாரமில்லாத மலைப்பள்ளத்தாக்கின்கண் கேட்கும் மந்தமான சப்தத்திலும், மற்றவிடங்களை நோக்க, நாம் அறிதல், லகுவானவிஷயமே. நான் சொல்லுகிறது யாதெனில், அவ்விடங்களில் அவர் மகிமையைத் தெளிவாயறிவோம், உணர்வோம். மற்றவிடங்களிலும் அவரையறியமேறது இருந்தாலும், அவர் வசநிக்கும் வார்த்தையைக் கேட்கின்றோமில்லை; செவிடாயிருக்கிறோம். அவர் பேசுகிறார். நாம் கவனிக்கின்றோமில்லை; குற்றமும் குறையும் நம்மிடமுள்ளன. நாமிருக்கும் நகரத்தின் வாழ்விற்குரிய பரபரப்பும் ஆரவாரமும் கவலையும் மனச்சலனமும் இறைவன் பேசும் வாக்கைக் கேட்காமலிருக்கும்படி செய்விக்கின்றன. நம் மநம் உறுதிப்பாடுள்ளதாகவும் நம் காதுகள் நுண்ணிய சப்தத்தைக் கேட்கும் இயல்பினவாகவும் நாம் உலக

---

* விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை யிலாதானே!"—மாணிக்கவாசகர்.

† பிரஹ்லாதருக்குத் தூணில் தோன்றினார் கேநோபநிஷத்தில் தேவர்களுக்குத் துரும்பில் தோன்றினார்.

ஆசைகளைத் துறந்து ஆன்மாவின் நோக்கமுள்ளவராகவுமிருப்போமாகில், காட்டின் ஏகாந்தத்திலும், மலையின் குகையிலும், நடுராத்திரியில் விண்மீன்பரப்பின் காட்சியிலும், இவைபோன்ற ரமணீயமான இடங்களில் ஈசுவர ஸாந்நித்தியத்தை உணர்வது எவ்வளவு இலகுவோ அவ்வளவு இலகுவாய் சாதாரண உலகக் கூச்சல்களிலும் ஆரவாரத்திலும் அவர் விபூதியை யுணரலாம். அதனால் நாம் தெரிந்துகொள்ளும் சித்தாந்தமாவது, நாம் கண்மூடிகளாகவும் மநக்கண் மருள்பெற்றவராகவுமிருக்கின்றமையால் தான் இறைவன் அங்கும் இருக்கிறார் இங்குமிருக்கிறார் என்பதை நாமறிகிலோம்.

5. ஆன்ம முறையான சன்மார்க்க முறையை அப்பியஸிப்பதை அநுசரித்து ஏற்படும் நிபந்தனைகளாவன: உங்களைச் சுற்றி வஸ்துக்கள் உங்கள் மநத்தைக் கவரும்படியாக ஏன் அமைக்கப்பட்டிருக்கின்றன? அவைகளை ஏன் சுவாதீநப்படுத்த விரும்புகின்றீர்கள்? எப்போதாவது இத்தன்மையான வினாக்களை நீங்கள் செய்திருக்கின்றீர்களா? உலகில் பலவாறாகச் சிதறுண்டிருக்கிற எண்ணிறந்த வஸ்துக்களின் அழகு உங்கள் ஆசைக்கு நேர்மையாக உங்களைப் பிரியப்படுத்துகின்றன. உங்கள் மநத்தைக் கவர்ந்து இழுக்கும்படியான தன்மையில்லாவிடில் அவைகள் அவ்விடமிரா. அவைகள் உங்களுக்கு உண்மையில் தடையாக விருக்குமாயின் அவைகள் உங்கள் பாதையில் ஏன் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்? ஒரு தாயானவள் தன் குழந்தையை நடக்கப் பழக்கும் முறையில் பிரகாசமான விளையாட்டுச் சாமான்களை அதன் முன்னர் சற்று தூரத்தில் ஆட்டிக்காட்டி குழந்தை எழுந்து நடக்க ஆரம்பித்து அதைத் தொடுவதற்கு உற்சாகத்துடன் கிளம்புங்கால், சற்று தூரம் அவ்விளையாட்டுச் சாமானைத் தள்ளி ஆட்டிக் காட்டுவது போல, அதே காரணத்தினால் உலகத்தில் மநத்தைக் கவர்ச்சி செய்யக்கூடிய பலவாறான வஸ்துக்கள் அங்குமிங்கும் இறைக்கப்பட்டிருக்கின்றன. குழந்தை தன் தாயால் காட்டப்பெற்ற அழகான வஸ்துவைப் பிடிக்கக் காலூன்றி எழ முயலுவான்; விழுவான்; மறுபடியும் எழுவான்; நடக்க முயலுவான்; விளையாட்டுச் சாமானைக் கைப்பற்றக் கஷ்டப்படுவான்; பிடிப்பான்; அதை எடுப்பான், பிரிப்பான், எறிவான், 'அதை

விட்டு வேறொன்றைப் பற்றத் திரும்ப முயலுவான். அழகான வஸ்துவைக் கிரகிக்க வேண்டுமென்ற கருத்துடன் தாயார் குழந்தை முன்னர் அவ் விளையாட்டுப் பொருளைக் காட்டினளில்லை; குழந்தையிடமுள்ள சக்தி விருத்தியாகி மலரவேண்டுமென்ற கருத்துத்தான் அவளிடமுள்ளது. பகட்டான வஸ்துவைக் கைப்பற்றியபின் குழந்தை அதை வெறுத்துச் சிந்நாபின்னப் படுத்துகின்றது. அவ்விதமே ஈசன் தாய்போல் நமக்கிரங்கி நம்மை நல்வழிப் படுத்தும் பொருட்டு நம் முன்னர் பகட்டான பதார்த்தங்களை அங்கு மிங்கும் அமைக்கின்றார். நம்மிடத்தில் அந்தர்கதமாயுள்ள சக்திகள் வெளிப்பட்டு மலரும் வண்ணம் நம்மைக் குழந்தைகளாக மதித்து நம்மை நடத்துகிறார். ஜநங்களை "வாஸா:" எனவேதம் கூறுகின்றது நம்மிடத்தில் முயற்சியையுண்டுபண்ணவும், ஊக்கத்தைஎழுப்பவும், (பாலர்கள்) பகட்டானபதார்த்தங்கள்மூலமாய் அந்தர்கதமாயுள்ளசக்திகளை மலரச் செய்கின்றார். நம்மைச் சுற்றி நாற்புறமும் சிதறிக்கிடக்கின்ற பகட்டானஉலகவிஷயங்கள் நாம்வெளியே நிப்பிரவிர்த்திக்கும்படியாக நம்மைத் தூண்டும் பொருட்டுக் கணக்கில்லாதபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கைப்பற்றக் கஷ்டப்படுகிறோம். அவைகளைப் பிடிக்க முயலுகிறோம். கடை முறையில் அவைகளைப் பிடிக்கிறோம். சொற்ப காலத்தில் பலன் ருசியற்று உவர்ப்பாய்ப் போகின்றது; மகா உயர்வுள்ளதென்று ஆவலுடன் பற்றிய பொருள் பதராய் முடிகிறது; அதன்மேல் வெறுப்பு உண்டாகிறது. இத்தன்மையாக நாம் விருத்தி யடைகிறோம். இதன் பயன் நம்மிட மேற்படுகிறது. நம்முள்ளத்தி லிருந்த யாதேனும் ஓரோர் சக்தி வெளிவருகிறது; ஓரோர் குணம் அபிவிருத்தி யாகிறது; ஓரோர் செயல் மலருகின்றது; ஓரோர் தகைமை யமைகின்றது; ஓரோர் திறமை வெளியாகி மேன்மை பெறுகின்றது. குப்தமாயிருந்த ஒரு குணம் ஒரு கிரியா சக்தியாகப் பரிணமிக்கின்றது. இவ்விதமாக ஏற்படவேண்டுமென்பதுதான் இறைவனது கருத்து. இக்கருத்து நிறைவேறின உடனே விஷயத்தின்மேலுள்ள பற்று அற்றுப் போகின்றது. அதன்மேல் அது தள்ளப்படுகின்றது. இவ்விதம் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பற்றுகிறோம். விகாசமுறையில் கீழ்ப்படியில் நின்று மேல்படியில் ஏறுகின்றோம். ஜந்மமுண்டு ஜந்மாந்

தாமுண்டு என்று நீங்கள் நம்பினால், ஈசுவரனுலமைப்பெற்றுள்ள பிரபஞ்ச சிருஷ்டியின் விவஸ்தையின் நேர்மையையும் அழகையும் மகிமையையும் பூர்ணமா யறிவீர்கள். அவ்விதம் நம்பாவிடினும் இருப்பும் இறப்பும் ஒரே ஜன்மத்தைப் பற்றியனவென்று நீங்கள் எண்ணினாலும், உங்கள் முயற்சியின் கதியில் நலம் உண்டென்றும், முயற்சியின் பலனிலதென்றும்,முயற்சியினால் நீங்கள் பெறும் சக்தி உயர்வென்றும், அறிவீர்கள். "ஒரு சரீரத்தி லிருந்துகொண்டு பட்டதுக்கம் நாம் மற்றொருசரீரத்தையடையுங்கால் ஒரு சக்தியாக அமைவுறுகிறதென் றறிவோம்." இவ்விதம் கார்ப்பெண்டர் (Carpenter) என்ற ஞானியார் வசனிக்கிறார். ஒரே ஜன்மத்திலுங் கூட தொட்டிலில் ஊஞ்சலாடும் காலம் முதற்கொண்டு மண்ணில் புதைவுறும் காலம்வரை மேற்கண்ட விதி நடைபெறுவதை நீங்கள் அறியலாம். உங்கள்வளர்ச்சி வெளிப்படையாய்ப்பெறும்பலத்தாலில்லாமல் நீவிர் செய்யும் முயற்சியின் திறத்தாலும் அதனாலுண்டாகும் மநச் சக்தி மலர்ச்சியாலும் உண்டாகிறதெனவறிக.

6. உலக விஷயங்களை நெடுநாள் அநுபவித்ததினால் ஞானியானவன் ஏற்படுகிறான். இதுகாறும் அவன் மநத்தைக் கவர்ந்தவைகளான உலகவிஷயங்கள் இப்போது அவன் மநத்தைக் கவரா. அதனால் அவைகளைப் பற்றும் முயற்சி அவனிட மில்லாது போகின்றது. அப்படியாகும் பக்ஷத்தில் அபிவிருத்தி பெறாமல் இருந்த நிலையிலேயே தங்கி க்ஷீணகதி யடைவான். உண்மையில் அப்படியன்று. உலக விஷயங்கள் முன்னரை விட இப்போது குறைவாக மநத்தைக் கவருகிறதினால் உலகத்தில் நடைபெறுகிறதற்கு அவன் புதிய நோக்கத்தை நாடவேண்டும்; அதற்கு இதுவே உற்றசமயம். இப்போது தான் ஆன்ம மார்க்கமாகிய சன்மார்க்கத்தில் பிரவேசிக்கும்படியானமுறை யேற்படுகின்றது. முன்னர் விஷயநுகர்ச்சி, சுயலாபங்களைக் கருதி ஒரு காரியம் செய்தான். இப்போது அக்காரியம் செய்தல் கடமை யென மதித்து அதைச் செய்வான். லௌகிக மார்க்கத்தை யநுஷ்டிக்கிற ஒருவனையும் சன்மார்க்க முறைபற்றி ஒழுகுகிற ஒருவனையும் பற்றி ஆராய்வோம். ஒருவனை மற்றவனாக மாற்றுதலுக்கு என்ன வேண்டுவதென்று விசாரிப்போம். ஒருவன்

உலகத்தில் அழுந்தினவன், பணப் பெருக்கை நோக்கி மிகவும்ஆசை கொண்டவன், பணக்காரனுகவேண்டி முயலுகின்றவன். அவனைப் பற்றி யோசிப்போம். அவன் செயலும் நோக்கமும் எல்லாம் ஒன்றே. பணம் சேர்ப்பதைப்பற்றியதாக நிகழும். அவ்விதம் பணம் பெறுதலுக்குத் தன் சரீர சுவாதீந முள்ளவனுயிருத்தல்வேண்டும். அப்படியின்றி சரீரம் அவனைச்சுவாதீநப் படுத்திக்கொண்டால் கால வியயம் ஏற்படும். தான் சிரமப்பட்டு ஸம்பாதித்த பணம் வீணுகச் செலவாகும். சரீரத்தின் திருப்திக்காகக் கஷ்டப்பட்டு ஸம்பாதித்த பணத்தைச் சுகத்தை நாடிச் செலவழிப்பான். பணம் ஸம்பாதிக்கும் முறையில் சோர்வடைவான். அதனுல் பணக்காரனுக ஆகவேண்டுமென்று விருமபுவோன் சரீரததைச் சுவாதீநப்படுத்திக்கொள்ள வேண்டியவனுவன். கஷ்டங்களையெல்லாம் சகிக்கும்படியாகச் சரீரத்தைப் பழக்குவான். மிகவும் செட்டாய்க் காலங்கழிக்கப் பழகுவான். அவ்விதம் நடைபெறுதற்கு, கஷ்டத்தைச் சகிக்க முயலுவான். ஒரு லாபத்தைப் பெறவேண்டி இரா முழுவதும் யாத்திரை செய்ய நேரிட்டால் தூங்கவேண்டுமென்று நினையான்.* ஒருவனிடம் சென்று அவனைச் சிநேகம் செய்து அவன் செல்வாக்கு மூலமாய்ப் பணம் பெறலாமென்றிருக்கும் பக்ஷத்தில், இராப்பகல் நினையாது நடு இராத்திரியிலேயே அவனிடம் போகவேண்டுமானுலும், இளைப்பாறவேண்டுமென்றஎண்ணத்தை முற்றும்தவிர்த்து, அவனிடம்போவான்.

பொன் ஆசைகொண்டவன் தன் சரீரத்தைச் சுவாதீநப்படுத்திக்கொள்ளுவான். அதன் சுகதுக்கங்களைப்பேணுன், கருதான். அதன் நோக்கப்படி ஒன்றும் செய்யான். தன் நோக்கப்படி அதை நடக்குமபடி ஆளுவான். இவ்விதமே அவன் முதலில் பெறும்பயனென்னவெனில், ஸ்தூல சரீரஜயமும் பின்னர் மந ஐகாக்ரியமும் பெறுவான். மநம் சிதருமல் ஒருமுகப்பட்டு வேலை செய்யாவிடில் வர்த்தகசாலையில் இவன் எதிரிகள் இவனை மேற்கொள்ளுவார்கள். ஒரு விஷயத்தைப்பற்றி மநம் அங்குமிங்கு மலையுமாகில் திடமான முயற்சியும் தொடர்பான செய்கையும் உண்டாகாமல் காரியச்சோர்வு ஏற்படும். அதனுல் குறிப்பிட்ட லக்ஷியத்தைப்

* மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

பெறுதலுக்கு மநச் சக்திகளை ஒருமுகப்படுத்தி ஐகாக்ரியம் கொள்ளும்படி செய்யவேண்டும். குறித்த காரியம் நிறைவேறும்வரை அதிலேயே மநத்தை இடையறாமல் நிறுத்துவான். அதனால் அவன் மநம் மேன்மேலும் ஸ்திரப்படுகிறது. மேன்மேலும கூர்மையாகிறது, மேன்மேலும் அவன் சுவாதீநமாகின்றது. ஸ்தூல சரீரத்தை ஜயித்தான், மநத்தைச் சுவாதீநப்படுத்திக்கொண்டான். இன்னும் இவன் பெற்றபேறு என்னவென்றாராய்வோம். திடமான புத்தி, நிச்சயமான தீர்மானக்கொள்கை, நினைத்த விஷயத்தைக் கொண்டுசெலுத்தும் உறுதிப்பாடு. இவ்விதம் ஒரு விஷயத்தைபடைய முயற்சியில் அவன் பெறும் பயன் இவைகளாம். இத்தகைய மனிதன் சரீர சுவாதீநம்பெற்று, மநச்சுவாதீநம் பெற்று திடமான ஊக்கமும் அடைந்து தான் லக்ஷியித்த பொற் குவியலையடைகிறான். பின்னும் என்ன? இப்பொற்குவியலால், தான்நினைத்தபடி ஆநந்தம்பெறவில்லையென்று அவனறிவான். தனக்குள்ள சரீரம் ஒன்றேயென்றும், அதற்கு வேண்டிய வஸ்திரம் ஒன்றேயென்றும், தனக்குள்ள வாய் ஒன்றேயென்றும், அதற்கு வேண்டிய உணவும் சொற்பமேயென்றும், தான் சேர்த்திருக்கிற பணம் ஏராளமாயிருப்பினும் தனக்கு வேண்டியவைகளெல்லாம் அற்பமென்றும், தன் விருப்பங்களை விருத்திபண்ண இயலாதென்றும், இவைகளால் தான் சந்தோஷமடையும் சக்தி மிகவும் சொற்பமாயும் வரம்புக் குட்பட்டதாயுமிருக்கிறதென்று மறிவான். முன் பிரீதியாகவிருந்த பொற்குவியல் இப்போது பாரமான வீண் சுமையாகிறது. பொற்குவியலைக் கைப்பற்றிய நிமிஷமுண்டான சந்தோஷம் வரவரக்குறைந்து இப்போது உவர்க்கிறது. அதன் பெருக்கத்தின் உரிமையால் முன் சந்தோஷித்தான். இப்போது தெவிட்டச் செய்யப்பெற்றவனாய் அதில் பிரியம் கொள்ளுகிறானில்லை. இத்தன்மையான அநேகர் யாதொன்றும் செய்யாதவர்களாய், மேன்மேலும் பணக்குவியலைமாத்திரம் அதிகப்படுத்திக்கொண்டு, பொனைக் குவித்தலென்ற வழக்கத்தை மாத்திரம் கொள்ளுகிறார்கள். முன் பிரியத்தை யுண்டுபண்ணினதே இப்போது மநத்தைத் தன்பூப்படுத்தும் ஒரு பெரிய சுமையாக முடிகிறது. முன் ஆவலோடு அதைச் சேகரித்தான்; இப்போது அது இவனை மேற்போகாமல் தள்ளி அழுத்துகிறது. (இன்னும் வரும்.)

ப. நா!

காயத்ரீ இராமாயணம்.

இராமாயண மென்னும் கிரந்தத்தை உபர்க்த இதிகாஸமென்றும், எல்லா தர்மங்களையும் விவரித்துக் கதாநாயகர்மூலமாய் அநுஷ்டித்துக் காட்டும் ஆதிகாவ்யமென்றும் நமது நாட்டில் ஆஸ்திகர்கள் அனைவரும் தொன்று தொட்டு பக்தி சிரத்தை ஆராதனைகளுடன் கொண்டாடுவதை நாம் அறிந்திருக்கின்றோம். இது தவிரவும் இராமாயணத்தையே ஒரு மகா மந்திரமாக மேலோர்கள் கைக்கொண்டு,

𑌅𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌮𑌹𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯, 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌃,
𑌅𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌬𑌾𑌦𑌿 𑌨𑌾𑌨𑌾𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿, 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾॥

என "இராமாயண மென்னும் மகா மந்திரத்திற்கு வால்மீகி பகவான் ரிஷி என்றும், அநுஷ்டுபு முதலியவை சந்தஸ்களென்றும், ஸ்ரீராமசந்திரனே தேவதை என்றும்" ஜபித்துவருவதைக் காணலாம். அந்த மந்திரத்தை அறிந்து, மானிடர்களின் நன்மையைக் கருதி, வால்மீகி பகவான் உலகத்துக்கு இராமாயணத்தை அளித்திருக்கின்றார்.

𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 ।
𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥

என்றபடி, "வேதத்தினால் அறியப்படக் கூடிய பாம புருஷனவன் தசரத குமாரனைப் பிறந்தவுடன் அந்த வேதமே ஸ்ரீவால்மீகியின் மூலமாக இராமாயண வடிவுகொண்டு பிறந்த" தென்று சொல்லப்படும். இப்பிரமாணத்தினால் இராமாயணத்தை வேதமென்று அநேகர் கருதுகின்றார்கள்.

𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃।
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌲𑍀𑌨𑌸𑍍𑌯 𑌯𑌃 𑌪𑌰𑌸𑍍𑌸 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

என, "வேதத்திற்கு ஆதியிலும், வேதத்திற்கு முடிவிலும், எந்த ஸ்வரமானது நிற்கின்றதோ, எது பிரகிருதியில் லயமாகின்றதோ, அதற்கு மேலுள்ளவன் (கடவுள் என்று பொருள்படுகிற

படி) மகேசுவரன்” என்று புகலும் வேதவசநத்தில் ‘ஓம்’ காரத்தை வேதத்திற்கு முதலாகச் சொல்லி யிருப்பதால் அந்த ஓம் காரத்தைக்கொண்டே வால்மீகி பகவான் இராமாயணமென்னும் வேதத்தை இயற்றக் கருதி அதின் ஏழு வியாகிருதிகளைக் கொண்டு ஏழு காண்டங்களையும் முதலில் கற்பித்தார் எனவும், அந்த ஏழு காண்டங்களில், ஒவ்வொரு காண்டத்திலும் ஒவ்வொரு வியாகிருதியின் தேவதையுடைய பெருமை விவரிக்கப்பட்டிருக்கின்றதெனவும், பிறகு அந்த ஓம் காரத்தின் விரிந்த வடிவான ஸாவித்திரீ என்னும் காயத்திரீ மந்திரத்தைக் கொண்டு இராமாயண கிரந்த முழுமையையும் இயற்றினர் எனவும், மேலோர்களின் கருத்து. அஃது எப்படியெனில், காயத்திரீ மந்திரத்தில் 24 எழுத்துக்கள் அடங்கி உள்ளனவாகையால் அந்த 24 எழுத்துக்களில் ஒவ்வொரு எழுத்துக்கும் ஆயிரம் சுலோகங்களாக இயற்றி மொத்தம் கிரந்தத்தை 24,000 சுலோகங்களால் வால்மீகி பகவான் அமைத்திருக்கின்றனர். இராமாயணத்தை மானிடர்கள் ஓம் காரமாகவும் காயத்திரீ மந்திரமாகவும், கருதலாம். அதை ஓம் காரமாகக் கருதினல் ஓம் காரத்திற்குப் பிரஹ்மா ரிஷியாகவும், பரமாத்மாவே தேவதையாகவுமிருப்பதால் அக்கருத்தை விளக்கி ராமரஹஸ்யோபநிஷத்தில்,

ராமேவ பரம்ப்ரஹ்ம ராமேவ பரந்தப:।
ராமேவ பரந்தத்வம் ஸ்ரீராமோ ப்ரஹ்ம தாரகம்॥

என்று சொல்லியிருக்கிற பிரகாரம் ராமனே பரமாத்மாவாகையால் ஓம் காரத்திற்கு ரிஷியாகிய பிரஹ்மாவே இராமாயணத்திற்குக் காரணமாக பால காண்டத்தில் முதலில் வந்திருக்கின்றார். இராமாயணத்தை காயத்திரீ மந்திரமாகக் கருதில், அந்த காயத்திரீக்கு விசுவாமித்திரர் ரிஷியாகவும், ஸவிதா ஆகிய சூரியன் தேவதையாகவும் இருப்பதால் இராமன் பிறந்தவுடன் விசுவாமித்திரர் வருவதையும், நிர்க்குணமான பரமாத்மாவே உபாஸனையின் நிமித்தமாக ஆதித்ய மண்டல வர்த்தியாக பாவிக்கப்படுகிறபடி, ஆதித்ய குலத்தில் இராமன் அவதரித்தார் எனக் கூறப்படுவதையும் காண்க. அவதாரம் என்றால் இறங்குதல் என்று பொருள். நிர்க்குணமான பிரஹ்மத்தை ஸகுணமாக உபாஸிக்கும்பொழுது நாம் அப்பொருளைச்

சூரியனாக உபாஸிக்கின்றோம். அப்பொழுது நம்முடைய உபாஸனைக்குப் பலன் அளிப்பதற்காக எல்லாப் பொருட்களுக்கும் மேலான பரமாத்மா சூரியனாகிய ஒரு பொருளின் கண் இறங்கி நம்முடைய உபாஸனையைக் கிரஹித்துக் கொள்கின்றார். நாம் உபாஸிக்கும் பொருள் பௌதிகமான சூரியனல்ல. அந்த சூரியனுக்குப் பிரகாசிக்கும் சக்தியைக் கொடுத்துக் கொண்டு அந்த சூரியனுக்கு ஆத்மாவாக விளங்கும் பரப்பிரஹ்மத்தையே உபாஸிக்கவேண்டுமென்று

'ஐ௦தஸ்ஷூபெ௨-ிாவஜெஸாக'

என்னும் சூத்திரத்தைக்கொண்டு ஸ்ரீமான் சங்கராசாரியர் முதலானவர்கள் கட்டளையிட்டிருக்கின்றார்கள். ஆகவே இராமாயண பாராயணமானது ஸகுண பிரஹ்ம உபாஸனை ஆகுமென்று எல்லாராலும் கருதப்பட்டுள்ளது. காயத்ரீயாகிய

தஸவிதுவ-ிெரணு௦ (ணியம்) ஊமெ-ிாஜெவஸு யீ௦ஹி
யியொயொ நஃ வூவொஜயாக॥

என்னும் மந்திரத்தின் பொருளானது மதபேதங்களுக்குத் தக்கவாறு பலவிதமாகக்கூறப்பட்டதாயினும் ஸாமாந்யமாக வாக்யார்த்தம் அடியில் வருமாறு.

குறிப்பு:—யஃ=எவன். நஃ = நம்முடைய. யியஃ=புத்திகளை வூ = நன்றாக. வொஜயாக = நடத்துவானோ. தக = அந்த ஸவிதுஃ = பிரகாசவடிவாகிய. ஜெவஸு=தேவனுடைய வரெணு௦ = மேன்மையுள்ள. ஊஜஃ = தேஜஸை. யீ௦ஹி = தியாநிப்போமாக.

அந்த காயத்ரீ மந்திரத்தினால் பிரதிபாதிக்கப்படும் "தேவன்" ஸகுண பிரஹ்மமாகவும், அவனுடைய பராசக்தியாகிய மாயையே வரெணு௦ ஊஜஃ ஆகவும் கூறப்பட்டிருப்பதால் அந்த தேவனே இராமனென்றும் அவனுடைய வரெணு௦ஊஜஃ ஆகிய மாயாசக்தியே ஸீதாதேவியாகவும் மேலோர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். அவ்விதமாகவே அத்யாத்ம இராமாயணம் முதலாவதுஸர்க்கத்தில் ஸீதாதேவி, ஹநுமானுக்கு அடியில் கண்டபடி உபதேசித்து இருக்கின்றாள். அதாவது

ராமம் வித்தி பரம் ப்ரஹ்ம ஸச்சிதானந்தமத்வயம்।
ஸர்வோபாதிவிநிர்முக்தம் ஸத்தாமாத்ரமகோசரம்॥
மாம் வித்தி மூலப்ரக்ருதிம் ஸர்கஸ்தித்யந்தகாரிணீம்।
தஸ்ய ஸந்நிதிமாத்ரேண ஸ்ருஜாமீதமதந்த்ரிதா॥

"இராமனை ஸச்சிதாநந்தமும், இரண்டற்ற ஒருபொருளும், ஒரு உபாதியுமற்ற இருப்பென்னும் தன்மையுடையதும், இந்திரியங்களால் அறியப்படாததுமான பரப்பிரஹ்மமென்று தெரிந்துகொள். என்னை ஆக்கல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழிலையும் அவனுடைய சந்நிதியைக்கொண்டு செய்கின்ற மூலப்ரகிருதி யென்று தெரிந்துகொள்" என்பதாம்.

காயத்ரீயில் தேவனையும் அவனுடைய மாயா சக்தியையும் ஒன்றாகவே பாவிக்கவேண்டுமென்பதையும், அவ்விதமாகவே யோகிகள் பாவிக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டுக் காண்பிக்கும் வண்ணம் காயத்ரீ மந்திர ரிஷியாகிய விசுவாமித்திரர் இராமனையும் ஸீதாதேவியையும் விவாகமூலமாக ஒன்றாகச்சேர்த்துவைத்தார் என ஸங்கேதமாகக் கதையானது விவரிக்கப்பட்டுள்ளது. காயத்ரீ மந்திரத்தில் பிரதிபாதிக்கப்படும் தேவனுடைய மாயா சக்தியானது நமக்குள் அந்தர்யாமியா யிருந்து நம்முடைய புத்திகளை ஏவி நடத்தும்வண்ணம் இராமாயணக் கதையில் விவரிக்கப்படும் தர்மங்கள் நம்முடைய புத்திகளைக் கல்மஷ மற்றனவாக வாக்கி அவைகள் நியாயமான வழியில் பிரவிர்த்திக்கும்படி செய்கின்றன. அந்த இராமாயணத்துள் அடியில் கூறப்பட்டிருக்கும் 24 சுலோகங்களுக்கும் காயத்ரீ இராமாயண மென்று பெயர். அந்த சுலோகங்கள் ஒவ்வொன்றும் கதா ஸந்தர்ப்பத்தில் அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு பொருள் உள்ளதாக அமைந்திருப்பினும் அந்த 24 சுலோகங்களையும் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில் காயத்ரீ மந்திரத்திற்கு அதிகாரியான ஒருவன் அந்த அதிகாரம் பெற்றது முதல் ஜந்மமுடிவுவரை அநுஸரிக்க வேண்டிய முக்கிய தர்மங்களை விவரித்து அவனுடைய புத்தியை (ப்ரசோதயாத்) சரியாய் ஏவி நடத்துகின்றன. காயத்ரீ இராமாயணமாகிய அந்த 24

சுலோகங்களையும் மேலே கண்டபடி பொருள்படும் அர்த்தத்தையும் அடியில் வருமாறு காண்க.

ஒருவன் உபநயநத்திற்குப் பிறகு குருகுல வாஸம் செய்து எல்லா வித்தைகளையும் கற்றுக்கொண்டு பிறகு ஆசாரியன் முன்பாக வந்து

(1) த = தபஸ்ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம்।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம்॥

(பாலகாண்டம் முதல் ஸர்க்கம் முதல் சுலோகம்.)

(1) தவம், தன்னுடைய வேதத்தின் அத்தியயநம் இவைகளில் இருப்பவரும், வேதத்தை அறிந்தோருக்குள் மேலானவரும், சமதமாதிகளில் தேர்ந்தவருமான குருவை நோக்கித் தன்னை மூடிக்கொண்டிருந்த பிறவிக் குற்றத்திலிருந்து வெளியேறினவனும், தவம் நிறைந்தவனுமான சிஷ்யனானவன் நான் இனி நடக்க வேண்டிய முறை என்னவென்று கேட்டான்.

குறிப்பு;—இந்த சுலோகத்தில் நாரதம் = நாரம் = ஞானம், அதைக்கொடுப்பவன் நாரதன் அதாவது குரு என்று பொருள்.

வால்மீகி: = புற்றிலிருந்து உண்டானவன், அதாவது புற்றிலிருந்து வெளியேறி வருவதுபோலப் பிறவிக் குற்றத்திலிருந்து வெளியேறியவன் என்று பொருள்.

பரிபப்ரச்ச = நன்றாகவும் விவரமாகவும் கேட்டானென்று பொருள். பரி என்னும் உபஸர்க்கத்திற்கு அப்பொருள் அமையும்.

(2) ஸ = ஸ ஹத்வா ராக்ஷஸான் ஸர்வான் யஜ்ஞக்நான் ரகுநந்தந:।
ருஷிபி: பூஜிதஸ் தத்ர யதேந்த்ரோ விஜயே புரா॥

(பாலகாண்டம் 30வது ஸர்க்கம் 22-வது சுலோகம்.)

(2) அந்த குருவானவர், பரித்யாகத்திற்கு (யக்ஞத்திற்கு) விரோதிகளான காமக் குரோதாதிகளை ஜயித்தவராகவும், சுலபத்தில் ஸந்தோஷத்தை அடையக்கூடியவராகவும் ரிஷிகளால் நன்கு பூஜிக்

க்கப்பட்டவராகவும், விஜயத்தை அடைந்த இந்திரனைப்போல வேண்டுதல் வேண்டாமை யென்பவையில்லாத பாக்கியவனுகவும் இருந்தார்.

குறிப்பு:—லகுஸந்தோஷீ = (லகு = சீக்கிரமாக, சுலபமாக ஸந்தோஷீ = ஸந்தோஷப்படுகின்ற) சுலபத்தில் சந்தோஷத்தை அடையக்கூடியவரும்.

(3) வி — விஶ்வாமித்ரஸ்து தர்மாத்மா ஶ்ருத்வா ஜநகபாஷிதம்।
வத்ஸ ராம தநு: பஶ்ய இதி ராகவமப்ரவீத் ॥

(பாலகாண்டம் 67வது ஸர்க்கம், 12-வது சுலோகம்.)

(3) எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புள்ளவரும் தர்மஸ்வரூபியுமான அந்த குரு அந்தசிஷ்யனுடைய பெற்ருேர்கள் சொல்வதையும் கேட்டு ஏ! குழந்தாய்! ரம்யமானவனே! வில்லைப் பாரென்று சுலபமான மார்க்கத்தைச் சொன்னர். அதாவது, வில்லானது வளைந்து சத்ருவை ஜயிப்பதுபோல, நீயும் கிருஹஸ்தனுகி மாதா, பிதா, குரு, அதிதி, பிதுர்க்கள், தேவதைகள் முதலோருக்கு வணங்கி தர்மங்களைப் புரிந்து, உன் ஆத்மாவுக்கு விரோதிகளான பாபங்களை ஜயிக்கவேண்டும் என்ருர் என்பது கருத்து.

குறிப்பு:—விஶ்வாமித்ர: = எல்லாரிடத்திலும் அன்புள்ளவர். ராம: = ரம்யமானவன்.

ராகவம்=சுலபமான (லகு=சுலபமான) தன்மையுடையதை, அதாவது, கிருஹஸ்தாசிரமம் என்பது பொருள்.

(4) தத: ஸ தத்ராவாஸ்ய ததாவம்ஶம் ப்ரவிஶ்ய ஸ விஶாம்பதே:।
ஶயநீயம் நரேந்த்ரஸ்ய ததாஸாத்ய வ்யதிஷ்டத ॥

(அயோத்தியா காண்டம் XV 20.)

(4) அந்த சிஷ்யன் விவாகம் செய்துகொண்டு தன்குலத்தைப் (பிதுர்க்களை) ஸந்தோஷப்படுத்தினன். வநத்தை விட்டு அரசனுடைய ஆளுகைக் குட்பட்ட நகரம் அல்லது கிராமத்தில் பிரவேசித்து அங்கே வசித்திருந்தான்.

(5) வஃவ நவாஸம் ஹி ஸம்வாஸ்யவாஸாம்ஸ்யாஹரணாநி வ।
ஐதஹ்ராஶிநமஹஹ்ஷஂஜைஸ்வீதாயெஶ்ஶுஶுஹ்ரொரஃதெள॥

(அயோத்தியாகாண்டம் XL 15.)

(5) அந்த சிஷ்யனேடு செல்லுகின்ற மனைவிக்கு அவனுடைய மாமனர் சுகமான வீட்டையும், வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் அவளை வெகுமானித்துக் கொடுத்தார்.

குறிப்பு:—வஸவாஸம்= (வஸ=ஸுகமான, வாஸம் = வீட்டை) ஸுகமான வீட்டையும், ஸம்வஸ்ய=நன்ருகத் துதித்து, வெகுமானித்து, வீதாயெ=வீதா=கட்டப்பட்டவளென்பது பொருள். வீத=கட்டுண்ட, அதாவது விவாகம் செய்து கொடுக்கப்பட்ட.

(6) ரா(ரஃ)=ராஜாஸத்யம் வ யஃஶ்ம் வ ராஜாகுலவதாம்குலம்।
ராஜாமாதாபிதா வைவ ராஜாஹிதகரொநரணாம்॥

(அயோத்தியாகாண்டம் LXVII 34.)

(6) அந்த கிருஹஸ்தனுக்கு ஸத்யம், தர்மம், நல்லகுலத்தில் பிறந்தவர்களுடைய குலம் இவைகளே ராஜா, அதாவது அவன் வணங்கும் பொருள்கள். மாதாவும், பிதாவும், ஜநங்களுக்கு உபகாரம் செய்கிறவனும் அந்த சிஷ்யனுக்கு ராஜா, அதாவது அவன் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிருன்.

(7) ணி (நி) =

நிரீக்ஷ்ய ஸ ஃஸுஸஹ்ஸீநஂதஸ்மிஞ்ஹ்வரதொதமஹாஶ்ரம॥
உடஜெராமஂஶுஸீநஂ ஜடாவஃலதாரிணம்॥

(அயோத்தியாகாண்டம் Xc, IX 25.)

(7) அந்த சிஷ்யனுனவன் அவனுடைய கடமைகளைச்செய்யும்போது சௌகர்யமான காலத்தை வருவித்துக்கொண்டு ஆச்ரமத்தில் ரம்யமாக ஜடையுடனும் மரவுரியுடனும் விளங்குகிற குருவைப் போய்ப் (பார்த்தான்) பார்க்கின்ருன்.

குறிப்பு:— பாரத: = பாரம் = பாரம், கடமை. பாரத: = (ஐந்தாம் வேற்றுமை) கிருஹஸ்தாச்ரம பாரத்திலிருந்து கொஞ்சம் நிவிர்த்திசெய்துகொண்டு என்பது பொருள்.

ராமம் = தன் ஆத்மாவிலே ரமித்துக்கொண்டு ஆநந்திப்பவன்.

(8) யம் = யதி புத்தி: க்ருதா த்ரஷ்டும் அக்ர்யாக்ர்யம் தம் மஹாமுநிம்।
அத்யைவ கமநே புத்திம் ரோசயஸ்வ மஹாயஶ:॥

(ஆரண்யகாண்டம் XI 44.)

(8) கிருஹஸ்தாசிரம தர்மங்களையெல்லாம் செய்து கிருதகிருத்தியனாகிய சிஷ்யனைப்பார்த்து குரு சொல்வது.

"உயர்ந்த பொருளுக்கெல்லாம் உயர்ந்ததாகிய பரப் பிரஹ்மத்தைப் பார்க்க (தியானத்தினால் அநுபவிக்க) உன் மநமானது தீர்மானிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இப்பொழுதே அதற்காகப் போவதற்குப் பிரியப்படு."

குறிப்பு:— அக்ர்யாக்ர்யம் = அக்ர்ய + அக்ர்யம் = மலைமேலிருக்கிற, அதாவது உயர்ந்த நிலையிலிருக்கும் பொருள்களுக்கெல்லாம் முடிவாகிய.

முநிம் = பரமாத்மாவை, கல்லூகபட்டர் மநுஸ்மிருதி எட்டாவது அத்தியாயம் 91-வது சுலோகத்தின் வியாக்கியானத்தில் முநி என்னும் சொல்லுக்கு பரமாத்மாவென்று அர்த்தம் கூறியிருப்பதைக் காண்க.

(9) ஸ = ஸாதவ்யாய-வேத்யஸ்ய [illegible] ॥
[illegible] விஸ்மயம் ஜநயிஷ்யதி॥

(ஆரண்யகாண்டம் XLIII 17.)

(9) சிரேஷ்டனானவனே! ஸாங்கியமாகிய (விசாரித்துத் தேடித் தெரிந்துகொள்ளவேண்டிய மார்க்கமாகிய) இந்த ஞானமார்க்கம் எனக்குத் தெளிவாயிருக்கிறது. கர்மத்திற்குட்பட்ட உன்னுடைய புத்திரனுக்கும் உன்னுடைய மனைவியைப் பெற்றவர்களுக்கும் (அயுக்தமென்று) ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

(இன்னும் வரும்) **P. S. S.**

சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்.

(262-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒருகணவனையடைந்து வேண்டியபடி சகல போகபோக்கியங்களையும்அனுபவியாமல் ஜன்மத்தைவியர்த்தமாக்கிக்கொள்ளாதே, புண்ணியமென்றும், பாவமென்றும், சுவர்க்கமென்றும், நரகமென்றும், நன்மையென்றும், தீமையென்றும், வீணர்கள் வித்தியாசப்படுத்திச் சொற்ப வாழ்நாளில் அநுபவிக்கக்கூடியசுகத்தை அநியாயமாய் இழந்துவிடுகிறார்கள்.

கண் கண்டதே காட்சி என்பதை அவர்கள் உணர்வதில்லை. செத்தபின் யார் எப்படிப் போகிறார்களோ,யார்தான் எதைக் கண்கூடாகக் கண்டவர்கள். எல்லாம் கட்டுப்பாடே ஒழிய வேறில்லை. இருக்கிறவரை ஏதோசந்தோஷமாய்ச் சகலபோகபோக்கியங்களையும் அநுபவிப்பதல்லவோ மேல்? அநியாயமாய் எல்லாவற்றையும் இழக்காதே. இவ்வாறான பாக்கியம் எங்களுக்குக் கனவிலும் கிடைக்குமா? நாங்கள்எல்லாம் எத்தனையோகஷ்டப்பட்டு இந்தபோகபோக்கியங்களை அநுபவிக்கமுயல்கின்றோம்.உன் அதிர்ஷ்டவசமோ,எல்லாம் ஒருங்கே வாய்ந்த வண்ணமாக இருக்கின்றன. "நங்காய்! மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" அதை நீ எள்ளித் தள்ளாதே. கரணம் தப்பினால் மரணம். அவ்வணிகன் சொற்பநாளே உனக்குக் காலங்குறித்திருக்கிறான். அதற்குள் உனக்கு வேண்டிய சௌகரியங்களைத் தெரியப்படுத்து. எல்லாம் உடனே முடிந்துவிடும், நீ மட்டும் அவனுக்கிணங்கி அவன் மனைவியாயின் அவனது பட்டமகிஷியாவாய். எத்தனையோ ஸ்திரீகள் அவனுக்குண்டு. உன் மாதிரியாகவே சிலர் பலநாள் பிடிவாதம் செய்து, பின் என் பேச்சுக்கிணங்கிச் சுகமாய்க் காலங்கழித்து வருகிறார்கள். உனக்கு வேண்டிய நகைகளும் பட்டுப் பட்டாடைகளும் வாகனாதிகளும் ஏவலாட்களும் எத்தனையோ விதங்களாய் அளிக்கத் தீர்மானித்திருக்கிறான். இன்று, இரவில் நீள நினைத்து சீர்தூக்கிப்பார், நாளைக்காலைவருவேன், அப்பொழுது உன் தீர்மானம் சொன்னால் போதும். அதுவரை உனக்கு யோசிக்க இடங்கொடுக்கிறேன். நீ புத்திசாலி, தீர்க்காலோசனை பண்ணுவதில் மகா தீர

டையவள். அவ்வாறு செய்வது உத்தமந்தான். ஆனால் நான் சொல்லியிருக்கும் ஆணித்திறமான மொழிகளை நன்கு சீர்தூக்கிப் பார். ஒவ்வொன்றும் அநுபவத்தாற் கூறப்பட்டது. இன்று நான் நெடுநேரம் இங்கு இருந்துவிட்டேன், நான் போய்வருகிறேன் என்று செலவு பெற்றுக்கொள்ள எழுந்திருக்கையில், "இதுவும் ஓர் ஆச்சரியந்தான். நம் ஜன்மத்துக்கு இந்தத் தீமொழிகளைக் கேட்க வேண்டிய விதியிருந்ததுபோலும், எல்லாம் பூர்வஜன்ம கர்மபலன் என்கிறார்களே என்று நினைத்துத் தன் வைரம் போன்ற மனத்தை இதுகாறும் பொறுமையுடன் திடப்படுத்திக் கொண்டிருந்ததைப் போலவே பின்னும் திடப்படுத்திக்கொண்டு பின் வருமாறு விடை பகர்வாளானாள்:—"கணிகாய்! குலத்தளவே யாகுங் குணம்" என்ற முதுமொழி பொய்க்குமா? "காவலனே பாவையர்க்கழகு" என்பதைக் கேட்டிருக்கமாட்டாய் போலிருக்கிறதே. உண்மை தான். இக்காலப் பெண்பாடசாலைகளில் இவ்வித உத்தம வாக்கியங்கள் பெண்கள் படிக்கும் புத்தகங்களில் கூடக் காணவில்லையல்லவா? லோகம் முழுதும் செல்வத்திலும் சுகத்திலும் மயங்கிக் கிடக்கிறது. எது நித்திய சுகம், எது அநித்திய சுகம் என்பதை நீ எப்படி யறிவாய்! உன் குலத்தில் ஒரு நாளைக்காயினும் உன் பெற்றோர்கள் தக்க ஞானமொழிகளைப் புகட்டியிருந்தால் நீ பேசுவாயா? அவரை ஒன்று போடத் துவரை ஒன்று முளைக்குமா? ஜாதிக்குத் தகுந்த புத்திதானேமேலிடும். 'சொல்லால் அறிப ஒருவனை' என்பது பொய்க்குமா? நீ பேசின விஷயங்களெல்லாம் கடவுள் இல்லை என்று சொல்கிற நிரீசுவரவாதிகள் பேசும்மொழிகளாகவே இருக்கின்றன

"தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத் தம்பின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்"

நீ இதுகாறும் எதைப்பற்றிப் பேசிவந்தாயோ அதெல்லாம் சின்னாளிருந்து பின்பல் பிணியைத் தரக்கூடியது. ஒத்தகுலமும் அறிவும் அழகும் பருவமுமுள்ள குணவானைப் பதியாக அடைபவள் பாக்கியசாலி. எல்லோரும் சீதையும் இராமனுகவும், தமயந்தியும் நளனுகவும்,

சாவித்திரி சத்தியவானுகவும், சந்திரமதி அரிசந்திரனுகவும் இருக்க நினைந்தால் முடியுமா? பூர்வஜன்ம புண்ணியம் வேண்டுவதில்லையா? நான் உற்றார் பெற்றாரையும் என் அருமைத் தமயனையும் இழந்த பின்னர் இவ்வுலக சுகத்தைச் சிறிதும் விரும்பேன். வீணுக வார்த்தைகளைச் சிதறிப் பாவத்தைத் தேடிக்கொள்ளாதே. என் பெற்றோர் என் இளமைப் பருவத்தில் புகட்டிய போதனைகள் என் மனதின்கண் வேரூன்றியிருக்கின்றன. இம்மாதிரியான தீச்சொற்களை விதிவசத்தால் இன்றுதான் கேட்கலானேன். அதுவும் நான் செய்த துஷ்கர்மம். மனத்தினுலும் நினைக்கவொண்ணுத மொழிகளை யெல்லாம்புகன்ருய். உன் துர்க்குலத்திற்குரியமொழிகளை நீயே வைத்துக் கொள். எத்தனையோ இழிவான பிறப்புக்களை யெல்லாம் தாண்டி மனுஷ ஜன்மமெடுத்தும் அதில் நற்கருமம் செய்து ஜன்மத்தை ஈடேற்றிக் கொள்ளாமல் பாழ் நரகில் வீழ வழிதேடலாமா? ஏன் உனக்கு இந்தத் துர்ப்புத்தி? பணப்பேராசையன்ருே உலகத்தில் எதையும் செய்ய மனிதர்களைத் தூண்டுகின்றது. செல்வமும் யாக்கையும் நிலைபாக மாட்டாதென்பதற்குப் பிரதிதினம் லோகத்தில் பல திருஷ்டாந்தங்களைப் பார்க்கிருேம். அற்பமாகிய போகிச்சுகத்தின் பொருட்டு நெடுங்கால நன்மையை இழக்கலாமா? என் தாயார் பலமுறை பலஉத்தமிகளுடையகதைகளைக்கூறியது இச்சமயம் என் ஞாபகத்துக்கு வருகிறது. "சிறுபோதே கல்வி, சிலையில் எழுத்து" என்று கூறுவது உண்மையே. அம்மொழிகளே! எனக்கு இச்சமயம் தக்க காப்பாகின்றன. அருந்ததி, அனசூயை, சுகஷாமை, துரோபதை முதலிய உத்தமிகளுடைய சரித்திரத்தை ஸ்திரீகள் ஒவ்வொரு நிமிஷமும் சிந்திக்கக்கடவர். முற்கூறிய சீதாதேவி, தமயந்தி சாவித்திரி, சந்திரமதி முதலிய உத்தமிகளுடைய வழிகளைப் பின்பற்றக்கடவர். சீதை தன் பதிவிரதா தர்மத்தால் அக்கினியைக் குளிர்வித்தாள். தமயந்தி தன்மீது மையல் கொண்ட வேடனை எற விழித்துப் பார்த்துச் சாம்பராக்கினுள். சாவித்திரி தன் உத்தமகுணத்தால் யமன் வசப்பட்ட தன் பர்த்தாவின் பிராணனை மீட்டுவந்தாள். சந்திரமதி தன்கற்பின்மகிமையால் தன்புருஷன் சத்தியத்தை உலகத்தில் நிலைநிறுத்தினுள். மைத்திரேயி, கார்க்கி முதலிய உத்தமிகளிடத்தில் அரண்யவாசிகளான ரிஷிகள் எல்லாரும் ஞானம்கேட்டு மகி

மையடைந்தார்களென்றால் உத்தமிகளுடைய மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ? கணிகாய்! உன் ஜாதிக்குரிய தர்மங்களையும் நீ சரிவர நடத்தினால் உனக்கும் நற்கதி யுண்டாகுமே, அவ்வாறின்றி ஏன் பாவ ஜன்மத்தில் பின்னும் பாவத்தைச் சுமக்கவழிதேடுகிறாய்? நேரயாய்விட்டது, வீட்டுக்குப்போ. துஷ்டர்களுடைய கூட்டுறவு அதிக நேரமிருத்தல் கூடாது. அதனால் விளையும் தீங்கு பல. சற்றுந் தாமதியாதே. வந்த வழியைப் பார்த்துக்கொண்டுபோ. இனி இத்துர்ப்போதனைகளை எவர்க்கும் போதிக்காதே" என்று கூறிச் சரேலென்று தன்னிருப்பிடத்துக்குச் சென்றாள் சுமதி.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

நன்மொழி.

115. சிரத்தை என்பது குருவின் உபதேசத்திலும் ஞான சாஸ்திரத்திலும், தன்னிலும் நன் னம்பிக்கை கொள்ளுதல். ஞான தீக்ஷை குருவால் கிடைக்கும் சமயத்தில், அவர்பால் நம்பிக்கை குன்றாமலும், தான் மனச்சோர்வும் நொய்மையும் கொள்ளாமலும், தைரியமாக நிற்றலும், எல்லாம் ஈசுவர அம்சமுள்ளவை, தானும் ஈசுவர அம்சமுள்ளவன் எனக் கருதலுமாம். உண்மையில் எல்லோரும் ஈசன் எனக்கருதி நடக்கிறவன் குரு அடைந்திருக்கும் உயர்பதவி தனக்கும் கிடைக்கும் என உறுதி பெறல்வேண்டும்.

116. ஸமாதானம், மனநேர்மை அல்லது உபசாந்தி என்பது வேண்டுதல் வேண்டாமை இல்லாத மனோநிலை. "வானின்று இடிக்கில் என்? மாகடல் பொங்கில் என்? கால்நின்ற செந்தீ கலந்துடல் வேகில் என்?. தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்? நான் ஒன்றி நாதனை நாடுவன்" இத்தன்மையான மனோதைரியமுள்ளவனாய் இருத்தலே ஸமாதானமாம்.

காலஞ்சென்ற, கனந்தங்கிய வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள்.

பிரஹ்மஸ்ரீ வி.கிருஷ்ணஸ்வாமி ஐயர், B. A., B. L., C. S. I, அவர்கள் நம்மில் யாவரும் எதிர்பாராதபடி, திடீரென அகாலமரணத்தையடைந்தார்கள் என்ற துக்க சமாசாரத்தைக் கேட்க நம்மவர்கள் படும் துயரத்தை இவ்வளவினதென்று நம்மால் அளவிட்டுரைக்கமுடியாது. உயர்நலமமைந்த உத்தம புருஷர்களாக மதிக்கப்பட்டு விளங்கிய எத்தனையோ பேர்களை இதற்கு முன்னரும் நமது இந்திய நாடு இழந்து துக்கப்பட்டிருக்கின்றது. என்றாலும், இந்த உத்தம புருஷனை இழந்த விஷயத்தில் நமது இந்திய நாடும், முக்கியமாய் நமது சென்னைராஜதானியும் படுந்துக்கமானது முன்னர் ஒரு நாளும் பட்டறியாத பெருந்துக்கமாக இருக்கின்றது. ஏனெனில், உத்தம புருஷர்களெனக் கொண்டாடப்பட்டுத் தமது பேரையும் புகழையும் நிலைநிறுத்திச் சென்றவர்களான நமது முன்னோர்களிற் பெரும்பான்மையோர், பொதுநலங்களான எல்லாக் காரியங்களிலும் பிரவேசியாமல் குறிப்பான சில காரியங்களில் மட்டும் பிரவேசித்து அவற்றைப் பலவழிகளாலுஞ் செவ்வையாகச் செய்துவந்தார்கள். நமது ஐயரவர்களோ எனில், நற்காரியங்கள் என்றுசொல்லப்படும் எல்லாத் துறைகளிலும் பிரவேசித்து, அவற்றைப் பரிமளிக்கும்படி செய்ய வேண்டுமென்ற முழுநோக்கத்துடன் தமது கல்வித்திறத்தாலும், விடாமுயற்சியாலும், சரீரப்பிரயாசத்தாலும், ஆயிரக்கணக்காகக் கொடுத்துவந்த திரவியசகாயத்தாலும், பெரிதும் மேன்மைபெறச் செய்துவந்த உத்தமோத்தம மகோபகாரியாகையால் இவருடைய மரணமானது பாஷாபிமானிகள், மதாபிமானிகள், தேசாபிமானிகள் எனப்படுகின்ற பல திறத்தவர்களுக்கும் அளவுகடந்த பெரியதுக்கத்தை உண்டாக்கிவிட்டது. இவர்களுடைய அகால மரணத்தால் இந்திய நாடு தனது அருமைப்புதல்வர்களில் ஒருவரையும், சென்னை ராஜதானி தனது நாயகனையும், ஆர்யமதம் தனது ரக்ஷகனையும், பிரஹ்மஞான சபை தனது சகோதரனையும், ஸம்ஸ்கிருத பாஷை தனது நண்பனையும், தர்மரக்ஷணஸபை முதலாகிய அரிய பெரிய சபைகளும் வித்துவான்களும் தமது வள்ளலையும், ஏழைகள் தமது பிரபுவையும், சென்னைமாநகரம் தன்னை அலங்கரித்துவந்த ஒப்பற்ற ஒரு கனவானையும் இழந்துவிட நேர்ந்தது என்னலாம்.

சமீபகாலத்தில், அதாவது சற்றேறக்குறைய ஒரு மாதத்திற்கு முன் இந்த அரிய மேதாவியார், பட்டதாரிகளாகிய மாணாக்கர்களின் கூட்டத்தின் மத்தியில் சிரிய சிங்கம்போல எழுந்துநின்று உபந்யாஸித்த கம்பீரமான அந்தச் சிங்கநாதமானது, (Convocation address) அந்தோ! இன்னும் நம் செவிகளில் சுழன்றுகொண்டேயிருக்கின்றதே! அத்தருணத்தில், இவரது முகவிலாசத்தையும், இவரது உற்சாகத்தையும், இடிமுழக்கம்போன்ற இவரது குரலையுங்கண்டுங் கேட்டும் பெருமகிழ்ச்சியுற்றுப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்த எவருக்குத்தாம் இவர் இவ்வளவு சீக்கிரத்தில் இறந்துவிடப்போகிறாரென்பது தெரியும்? யாதொரு உபாதியுமின்றிப் பெரிய குதூகலத்துடன் டில்லி தர்பாருக்குச்சென்றவர்கள் தர்பார்காலத்தில் அங்கே இருக்கமுடியாதபடி மிகுந்த சுரத்துடனே சென்னைக்குத்திரும்பினார்கள். சென்னைக்கு வந்ததும் துடையில் சிறிதாகப் புறப்பட்டிருந்த சிரங்கானது ராஜப்பிளவையாகி, வரவர அதிகரித்து, சிறந்த வைத்தியர்கள் தங்களால் இயன்றவரை முயற்சித்துச் சிகிச்சை செய்ததிலுங் குணப்படாமல், நம்முடைய தௌர்ப்பாக்கியத்தினால் சென்ற மீ 28-ம் தேதி காலை 6 மணிக்குத் தேகவியோகமாயினார்கள். இவ்விசனகரமான சமாசாரம் இந்தியா எங்கும் பரவி எல்லாரையும் துக்கசாகரத்தில் அமிழ்த்தியது. இறக்கும் காலத்தில் இவருக்கு 48 வயதுதான். வியாதிவந்தபின், தாம் மரணம் அடைவோமென்று நினைத்தாரில்லை. தாம் எடுத்த ஜந்மத்தின் காரியம் முடியவில்லையென்றும், இன்னும் உலகத்திற்கு அநேகம் கைங்கரியங்கள் தாம் செய்ய வேண்டுமென்றும், அதனால் சமீபத்தில் மரணமில்லையென்றும் பிரஸ்தாபித்தாராம். "நெருநல் உளனொருவ னின்றில்லையென்னும்,—பெருமை யுடைத்திவ் வுலகு" என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, இவர் போய்விட்டார். இறக்குங் காலத்தில், உயர்நலம் அமைந்த அந்தஸ்தாகிய, கவர்னரின் மந்திராலோசனைசபையில் அங்கத்தினராக விருந்தார். ஆங்கில துரைத்தனத்தில் இந்தியர் பெறக்கூடிய உயர்ந்த அந்தஸ்து இதைவிட மேலானதில்லை. நாலுவருஷம் இந்த உத்தியோகத்தை வகித்திருப்பரேல் ஜனாநுகூலமான இன்னும் எத்தனையோ நற்கருமங்களை இவர் செய்திருப்பார். எல்லா நன்மைகளையும் அளித்த கடவுள் ஆயுளைமாத்திரம் பூர்ணமாக இவ

ருக்கு அளிக்கவில்லை. அற்ப ஆயுளையுடையவரானார். இந்த அற்ப ஆயுஸ் காலத்திலும் இவர் செய்த நற்காரியம் என்றும் அழியாத புகழுடம்பை உண்டுபண்ணியிருக்கின்றது. சென்ற பத்து வருஷங்களுக்குள் ஏற்படுத்தப் பெற்றுள்ள நற்கரும நோக்கமுள்ள சங்கங்கள், சபைகளுள் இவர்கள் முயற்சியாலும், இவர்கள் ஆதரவாலும், இவர்கள் திரவிய சகாயத்தாலும் உண்டானவைகள் பல. முக்கியமாக இந்தியன்பாங்கு, கைத்தொழில் அபிவிருத்திசபை, தர்மரக்ஷணஸபை, வேங்கடரமண வைத்தியசாலை, உயர்தர ஸம்ஸ்கிருத வித்தியாசாலை, ரானடே புஸ்தகசாலை என்பவைகளாம். இயற்கையாகவே புத்திமான், கல்விகேள்விகளால் அகன்ற அறிவுடையவராயினர். ஆங்கில பாஷை, ஸம்ஸ்கிருத பாஷை இவ்விரண்டிலும் விசாலமான படிப்புள்ளவர். வைதிக லௌகிக ஸம்பிரதாயங்களை நன்குணர்ந்தவர். ஆரியமதத்தில் நல்ல பற்றுள்ளவர், ஆசாரசீலர். ஈசுவரபக்தர். மதத்துவேஷம் இல்லாதவர். எல்லா மதங்களிலுமுள்ள உயர்ந்தோர்பால் அன்பும் ஆதரவுமுள்ளவர். சமீபகாலத்தில் ஆரிய சமயம் கிறிஸ்து சமயம் இவ்விரண்டையும் ஒப்புநோக்கி ஆராய்ச்சி செய்து நல்ல ஒரு வியாசம் எழுதுவோர்க்கு சம்பாவனை கொடுப்பதாகவும் வாக்களித்தார்கள். அன்பார்ந்த விரிந்த ஹிருதயத்தினர். இவரிடம் போய் யாசித்து வெறுங்கையுடன் திரும்பின ஏழைகள் இலர். உடல், பொருள், ஆவி என்னும் இவற்றை லோகோபகாரத்துக்கென்றே கொண்டிருந்தவர். "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்—பேரறி வாளன் திரு" என்னும் குறள்வாக்கியத்துக்கு நல்ல நிதர்சனமாக விளங்கிவந்தார். தமிழ்ப்பண்டிதர் ஒருவர் இவரிடம் போய் யாசித்தபோது 'நீர் படித்திருக்கிறீர் என்ற காரணத்தால் மட்டும் நான் உமக்குச் சகாயம் செய்யமாட்டேன். நீர் படித்தறிந்தவிஷயங்களைப் பிரசங்க மூலமாகவோ புஸ்தகங்கள் மூலமாகவோ பிறர்களுக்குத் தெரிவித்துப் பயன் பெறச் செய்வதாயிருந்தால்மட்டுந்தான் நான் உமக்கு உபகரிப்பேன்' என்று கூறினார். இதனாலும் இவருடைய லோகோபகாரசிந்தையானது நன்கு வெளியாகின்றதல்லவா! "ஈதல், இசைபட வாழ்தல், இதுவல்லது—ஊதியம் இல்லையுயிர்க்கு" என்ற அமுதவாக்கை உள்ளபடி கடைப்பிடித்து ஒழுகிய மஹான் இவரே. சிலர் இவரை முன் கோபி என்று ஒருவாறு

குறைகூறக்கூடும். அக்கோபத்தின் பயனை யாதொரு கெடுதியும் விளையாமையால் நாம் இவரது கோபத்தை ஒரு கோபமாகக்கூறமாட்டோம். இவரது புத்தியின் தீக்ஷண்ணியமும் படபடப்பும் வேகமும் இவரை ஒரு முன்கோபிபோலத்தோன்றும்படி செய்தன என்றே சொல்வோம்.

1885-ம் வரு ஹைகோர்ட்டு வக்கீலாக ஆயினர். சில வருஷங்கள் அதிக வேலையில்லாதவராக இருந்தனர். பின்பு அந்த உத்தியோகத்தில் தலைமை ஸ்தானத்தை வகித்தார். சென்னை யூனிவெர்விடியின் அங்கத்தினராக ஆனார். பின்னர் அதிலும் தலைமைஸ்தானத்தை வகித்தார். அச்சபையின் எக்காரியத்திலும் ஊக்கத்துடன் முன்னிற்பார். பின்பு, சென்னைச் சட்டநிருபண சபையில் யூனிவெர்விடி பிரதிநிதியான அங்கத்தினராக ஆயினர். அச்சபையில் அநேக சமயங்களில் இவர் செய்த புத்திசாதுர்யமான பேச்சைக் கண்டு, கனந்தங்கிய அக்காலத்திய கவர்னரவர்களும் பலமுறை மெச்சினார்கள். இவர்களுக்குள் அதிக பிரியமான சிநேகம் ஏற்பட்டது. பின்பு, சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். ஒரு வருஷந்தான் அவ்வேலையை நடத்தினார்கள். அதற்குள் இவரது புத்தியின் திட்பமும், வித்தையின் விலாசமும் அந்த உயர்தர நீதி ஸ்தானத்திற்கு ஒரு தேஜஸை யுண்டுபண்ணின. கடைசியில் இவர் கவர்னரின் மந்திராலோசனைசபையில் ஓர் அங்கத்தினராக உத்தியோகம் வகித்தார். 11-மாசந்தான் இந்த வேலையைப் பார்த்தார். இதற்குள் ராஜாங்கத்தாருக்கு இவர்பால் உள்ள மதிப்பும் நன்னம்பிக்கையும் மிகப்பெருகின. ஜநங்களுக்கு இவர்மீதுள்ள விசுவாசமும் அன்பும் அளவற்றது. பிறருடைய சிபார்சு இன்றித் தம்முடைய புத்தியின் பயிற்சியாலும், கல்வித்திறமையாலும், விழுமிய குணத்தாலும், உயர்ந்த சீலத்தாலும் புகழும் பிரதாபமும் பெற்ற புண்ணியரென எல்லாராலும் நன்குமதிக்கப்பெற்றார். இவர் மரணத்தால் பொதுவகையாக இந்தியாவுக்கும், சிறப்புவகையாக நம் சென்னைராஜதானிக்கும் பெரிய நஷ்டம் உண்டாயிருக்கிறது. "இவர் ஸ்தானத்தை வகிக்க எவர் இருக்கிறார்?" என்ற வினவிற்குத் திருப்தியான விடையளிக்க முடியவில்லையென அநேக அறிஞர்கள்

மநவருத்தத்துடன் தயங்குகிறார்கள். 'எடுத்த ஜந்மத்தின் காரியம் பூர்த்தியாகவில்லை' யென இவர்தாம் இறக்க நாலு திநத்திற்குமுன் சொன்னமையாலும், பரோபகார சிந்தையுள்ளவராக இருந்தமையாலும், ஸ்தூலசரீரம் சீத்தாலும் தியகுணம் தியசெயல் தியஎண்ணம், அற்பமேனும் இல்லாதவராய் இருந்தமையாலும், அதனால் புவர்லோக அநுபவம் சிலநிமிஷங்களாக இருக்கக்கூடியதாதலாலும், தியாகத்திலே கண்ணுங்கருத்து முள்ளவராதலால், சுவர்க்கலோக சுகாநுபவ இச்சையைத் துறப்பாராகையாலும், அதிசீக்கிரம் சரீரமெடுத்து இன்னும் அதிக சௌகர்யமுள்ள குடும்பத்திற் பிறந்து திடசரீரியாக ஜநோபகாரார்த்தம் திரும்புவார் என நினைக்கிறோம். இத்தகைய ஜீவாத்மா அவதார புருஷன் எனவே மதிக்கலாம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமாந். பி. எஸ். ராஜகோபாலையர் B A., B. L., F. T. S., அவர்களின் மரணம்

இவர்கள் நாளிது மீ 6-உ சநிக்கிழமை இராத்திரி 1-மணிக்கு மூச்சுக்குத்தினால் மார்பு அடைக்கப்பெற்று இராத்திரி 3-மணிவரையில் அந்த வியாதியால் வருத்தப்பட்டு இராத்திரி சுமார் 4-மணிக்குத் தேகவியோகமானார். இது மிகவும் பரிதாபமான மரணம். திட சரீரமுள்ளவராகவும் வியாதியில்லாதவராகவும் தோன்றினர். இறக்குங்காலத்தில் சுமார் 35-வயதுக்குட்பட்டவராகவே யிருந்தார். மதுரை பிரஹ்மஞாந சபையின் அங்கத்தினர்களுள் இவர் ஒரு முக்கியஸ்தர். இவர் நமது பிரஹ்மஞாந சபையின் அபிவிருத்தியில் நோக்கமுள்ளவர். பிரஹ்மஞாந சாஸ்திரங்களை ஐயமறப்படித்துத் தெளிந்தவர். இப்போதுதான் சமீபத்தில் மூன்றாவது ஸம்ஸாரம் விவாகம் செய்துகொண்டனர். இவர் மரணத்தால் இவர் குடும்பத்திற்கும் சிநேகிதர்களுக்கும் பெருந்துக்கம் உண்டாயிருக்கிறது.

பத்திராதிபர்.

348

காலஞ்சென்ற கநந்தங்கிய

வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் B. A., B. L., அவர்களின்

சரித்திரச் சுருக்கம்.

[இது விக்டோரியா எட்வர்ட் ஸரஸ்வதி விலாஸத்தின் சங்கஸ்தாபந தினமாகிய 1911ஆம் நவம்பர்மீ 11உ அன்று வாசிக்கப்பெற்றது.]

அறுசீர் விருத்தம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நற் பயனளிக்கும்
 நலத்தால் மிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே; நல் லார்குணஞ்சொல்
 வதுவும் நன்றே;
நல்லார்தம் முடனிணங்கி யிருப்பதுவும் நன்றே'' யென்
 றுரைத்த நங்கை
நல்லார்சொற் கடைப்பிடித்திங் கொருநல்லோன் குணஞ்சிறிது
 நவில்வேன் மன்னோ.

எழுசீர் விருத்தம்.

காவிரி நதியும், கடவுளா லயமும்,
 கடிமலர்ப் பொய்கையும், பொழிலும்,
தீவிரி வேள்விச் செழுமறை யவர்தந்
 திருத்தகு புனிதமா ளிகையும்,
நாவிரி கலைதேர் கழகமும், சைவர்
 நல்லறச் சாலையும் மடமும்
தூவிரி கவிஞர் துதிகொளத் துலங்கும்
 சோழநா டெனும்வள நாட்டில். (1)

சீர்பெறு தலங்கள் பலபல; அவற்றுள்
 செங்கண்மால் எங்கள்நா யகனை
ஏர்பெறு கமலம் ஆயிரம் அடியிட்
 டிறைஞ்சுவான் ஒன்றுறநாட் குறைய
ஆர்பெறு கண்கொண் டருச்சித்த தலமாய்,
 அரிவிழி மங்கலம் என்னும்
பேர்பெறு பெருமை பெற்றதாய்ப் பெரிதும்
 பிலப்பல மாகிய தலத்தில். (2)

மறையவர் குலமாம் பாற்கட லுதித்த
மாமதி யாய்க்கலை நிரம்பித்
தறையவர் தவமாய்த் தண்ணளி யுருவாய்ச்
சத்திய சீலனாய்க் கல்வித்
துறையவர் புகலாய் வேங்கட ரமணத்
தூயநற் பேரொடுந் தோன்றி
இறையவர் வியக்கும் முறைதெரி முன்சீப்
எனச்சிறந் தானொரு மேலோன். (3)

ஒப்பருங் கலையால், ஒழுக்கினால், உணர்வால்,
ஒளித்துரை செயாமன வலியால்
செப்பருங் குணமாங் குன்றிடை யிவர்ந்த
சிங்கமாய்ச் சிறந்தஅத் திறலோன்
தப்பருங் குணத்தில் தன்னையே போலத்
தனயர்கள் சிலவரைத் தந்தான்
அப்பரி கணிதர் தமக்குள்முன் னவனாய்
அவதரித் தவனையென் சொல்கேன். (4)

சத்தியம் கைக்கொண் டிடலிற்பன் னிரக்கந்
தழுவலிற் சாமிநா தப்பேர்க்
கொத்தியல் புருஷ ரிஷபமாய், யாதும்
இழுக்கமில் ஒழுக்கமுள் ளவனாய்ப்,
பத்தியிற் சிறந்த பாகவ தத்தைப்
பன்முறை பயின்றபண் டிதனாய்,
நித்தியப் பொருளின் நிறைகுண நினைந்து
நெஞ்சம்நெக் குருகுமா தவனாய். (5)

நிதிபதி பிரகற் பதியென நிறைந்த
நெடும்பெருஞ் செல்வனாய், நீதி
அதிபதி எனும்ஸப் ஜட்ஜியாய், அன்பி
னகமகிழ் காதலின் அமைந்த
சதிபதி யாகிச் சந்ததி தழையத்
தனயரைத் தந்துபின் துறந்தோர்
யதிபதி யாகி யிறையவ னடிக்கீ
ழெய்தினன் எய்திய புகழான். (6)

அன்னவன் தனக்கோர் கையதாய்க், கண்ணாய்,
ஆருயி ராய்அரு மருந்தாய்ப்
பின்னவ னாகிப் பெற்றவர் புரிந்த
பெருந்தவப் பயனெனப் பிறந்து,
‘சின்னவன் இவனோர் பெரியனாய்த் திகழ்வன்;
விளைபயிர் முளையிலே தெரியும்’
என்னநல் லறிஞர் வியந்திடப் பால
கிருஷ்ணனே யெனவளர்ந் தனனால். (7)

காலையில் எழுவான், கடன்களை முடிப்பான்,
கருத்தொடுங் கலைகளைப் படிப்பான்,
மாலையிற் சிவன்மால் ஆலயந் தொழுவான்,
மனத்திடைச் சிலையெழுத் தெனப்பல
நூலையும் பதிப்பான், நுண்ணறி வினன்பின்
நுவல்புகழ்த் துரைத்தனக் கல்விச்
சாலையிற் சேர்ந்து சகலமுந் தேர்ந்து
தனிப்பெரும் பட்டமும் பெற்றான். (8)

இட்டமும் கருத்தும் வைத்தருங் கலைகள்
யாவையும் உய்த்துணர்ந் ததற்பின்
சட்டமும் பயின்றோர் உன்னத நீதித்
தலத்துறும் வக்கிலாய்ச் சார்ந்து
கட்டமும் பெரிய நட்டமும் அடைந்தார்
கட்சியை நட்பமாய் உணர்ந்து
திட்டமுந் தெளிவுஞ் செறிதர விரைவாய்த்
தெரிப்பவன் எனமிகச் சிறந்தான். (9)

சென்னையிற் சிறந்த வக்கின்மார் குழுவில்
தேசுறும் அணியென விளங்கி,
அன்னையிற் பெரிய தண்ணளி யவனாய்
அறம்பல திறம்பெறப் புரிந்து,
‘முன்னையில் இவன்போற் பொன்மிகப் படைத்து
முகிலெனப் பொழிந்தவர் இல்லை,
பின்னையில் இல்லை’ எனப்புவி புகழப்
பிறப்பினும் பெரும்பயன் பெற்றான். (10)

ஊரிடைப் பழுத்த செழுந்தருக் கனியும்
ஊருணிப் புனலுமே போலாம்
காரிடைப் பயின்ற கொடைநலம் உடையான்
கட்படுந் திரு,எனும் மொழியைப்
பாரிடைச் சிறக்கச் செய்தஇப் பெரியோன்
பண்ணிய புண்ணியச் செயல்போல்
யாரிடை எவர்தாம் கண்டனர்? அந்த
யாதவர் கோனிடத் தல்லால். (11)

மெய்யுறு பிணிபோய் யாவரும் சுகிக்க
வேங்கட ரமணநற் பெயரால்
உய்யுறும் ஆயுர் வைத்திய சாலை
ஒன்றினைத் திறந்தனன், திறந்து,
நையுறு நோயைத் தீர்த்திடு முறையில்
நன்முறை யிதென எவர்க்கும்
கையுறு நெல்லிக் கனியினிற் காட்டிக்
கண்ணையும் திறந்தனன் மாதோ. (12)

உடலுறு நோயைத் தவிர்த்திட மருந்தை
யுதவிய தொன்றுமோ, ஒளிசெய்
மடலுறு தாரான் வடமொழிக் கலைகள்
வழங்குமோர் கழகமும் அமைத்துக்
கடலுறு பிறவி யிடைப்படுத் துயிரைக்
கடக்கொணா வகைமடுத் தொடுக்கும்
அடலுறு மாயைப் பிணிதவிர் மருந்தும்
அளித்தனன் அருமருந் தனையான். (13)

இன்னவன் தருமம் இவ்வள வேயோ,
இளகிய தருமசிந் தனையால்
முன்னவர் தருமந் தனைப்புரந் திடலே
முதன்மையாந் தருமமென் றுணர்ந்திம்
மன்னவன் 'தரும ரக்ஷண சபையை'
வைத்தறம் நிலைபெற வளர்த்தே
அன்னவர் தருமா லயங்களும் மடமும்
அழிவுறா வகைநிறுத் தினனால். (14)

"கற்றவர் தம்மைக் கற்றவர் தாமே
　　காமுறு வார்" என முன்னஞ்
சொற்றவர் மொழிக்கோர் நிதர்சன மாகத்,
　　தூயரில் தூயராய்ச் சிறந்த
நற்றவர் நமது ரானடே குணங்கள்
　　நனிவியந் திருந்ததை யன்றி
மற்றவர் பெயராற் புத்தகச் சபையும்
　　மயிலையிற் பயில்வுறச் சமைத்தான். (15)

முந்திய நிதியில் முதலிழந் தழுந்தார்
　　முறைபொலிக் கிரங்கிஇக் கூர்மைப்
புந்தியன் பெரிதும் ஒப்புர வறியும்
　　புண்ணிய னுதலால், உடனே
'இந்தியர் நிதி'யென் றொருபெரு நிதியை
　　எழில்பெற நிறுத்தினன், இன்று
வந்தியர் பாடும் மன்னவர்க் குரிய
　　வரிசையில் வந்தமா மறையோன். (16)

பொய்த்தொழில் புரிந்து பொழுதெலாம் பழுதாய்ப்
　　போக்குவார், புராரிமா லயனும்
முத்தொழில் ஓயா துழுற்றலை யுணரார்,
　　மூடராய் வீணராய் நமர்கள்
எத்தொழி லேனும் ஒருதொழில் உஞற்று
　　திருந்திடல் தகாதெனக் கருதிக்
'கைத்தொழிற் சங்கம்' ஒன்றுதா பித்தான்
　　கல்வியின் களஞ்சியம் அனையான். (17)

பண்ணரும் அறங்கள் இன்னணம் பலவும்
　　பழுதிலா முயற்றியின் இயற்றி
நண்ணரும் புகழால் நானிலம் அளந்த
　　நான்மறைக் குலவிளக் கனையான்
எண்ணரும் ஹைகோர்ட் ஜட்ஜ்எனும் பெரிய
　　இறையவர் பதத்தையும் எய்தி
நுண்ணரும் மதியின் மாட்சியால் அந்த
　　நோன்பத ஆட்சியிற் சிறந்தான். (18)

வித்திய அறத்தின் செழும்பயிர் விளைவோ,
மேதினி புரிந்தபாக் கியமோ,
நித்திய மறையோர் செய்தவப் பயனோ,
நெடுங்கடல் உலகெலாம் புரக்கும்
சத்தியக் கவர்னர் கௌன்ஸிலின் மெம்பர்த்
தானமும் தான்வகித் துயர்ந்தான்
நத்திய நமது க்ஷேமமே கருத்தாய்
நாட்டினுக் குழைத்திடு நல்லோன். (19)

பிறந்தவர் இவன்போற் பிறந்தவர் இல்லை,
பெருங்கலை யனைத்தையுங் கற்று
நிறந்தவர் இவன்போல் நிறந்தவர் இல்லை,
நீதியின் நெறிமுறை செலுத்திச்
சிறந்தவர் இவன்போற் சிறந்தவர் இல்லை,
செகத்தெனச் செகமெல்லாம் புகழப்
பிறந்தவ னுமிக் கிருஷ்ணசா மிப்பேர்ப்
பெரியவன் பெரிதும்வா ழியவே. (20)

பண்டிதர், **P. R.** கிருஷ்ணமாசாரியர்.

நன்மொழி.

---

117. தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே.

—திருமந்திரம்.

சமாசாரம்.

இங்கிலாண்டில் யார்க்கு நகரவாஸியான தோமஸ்வில்லியம் பர்ஜஸ் என்பவர் டோவர் பட்டணத்திலிருந்து பிரான்சுதேசத்திலுள்ள கலேய் பட்டணத்திற்கு இடையிலுள்ள 60 மைல் அகலமுள்ள சமுத்திர வாய்க்காலை 22 மணி நேரத்துக்குள் சென்ற செப்டம்பர்மீ 6உ நீந்திக் கடந்தார். இது மனோதைர்யத்தையும் தேகவலிமையையும் தீரத்தனத்தையும் காட்டுகிறது. ஆனால் இதனால் என்ன பிரயோஜநம்? மீன்களும் கூட நீந்துகின்றன. அவைகளைக் கண்டு நாம் ஆச்சர்யப்படுகின்றோமில்லை ஏனென்றால் அது ஈசுவர சிருஷ்டி. அதனால் ஈசுவரசக்தி விளங்குகிறது. ஈசுவரன் சர்வஞ்ஞன். மனிதன் கிஞ்சிஞ்ஞன். அதனால் அவன் செய்யும் செயல் அற்புதம் தானே.

கப்பல்களின் சமாசாரபத்திரிகை:— இப்போது கப்பல் யாத்திரை செய்பவர்கள், உலகத்தில் நடக்கும் சமாசாரங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு இயலாதவர்களாக இருக்கிறார்கள். மார்கோநி என்பார் கண்டுபிடித்துள்ள தந்திக்கம்பியில்லாத மின்சார உபாயத்தால், தரையில் நடைபெறும் சமாசாரங்களைத் தெரிந்துகொண்டு சில நிபுணர்கள் ஜர்மானிய, பிரான்சு கப்பல்களில் வர்த்தமானப் பத்திரிகைகளைக் கப்பல் பிரயாணிகளுக்காக, கப்பலிலேயே பிரசித்தம் செய்து வருகிறார்கள் இது கப்பலில் பொழுதுபோக்குக்காக அநுகூலமாக இருப்பதும் தவிர கப்பலில் யாத்திரை செய்பவர்கள் உலக விஷயங்களை அப்போதைக்கப்போது தெரிந்துகொள்ளற்குச் சௌகரியமாகவும் ஏற்படுகிறது.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கம்—இதன் காரியதரிசியவர்கள் அடியில் வருமாறு நமக்குத் தெரிவிக்கிறார்:—டில்லியில் தர்பார் நடந்திருக்கிறபடியால் இச்சங்கத்து வருஷாந்தர ஜந்து காட்சி வருகிற ஜனுவரி மாசம் கடைசியிலாவது பெப்ருவரி மாசம் முதலிலாவது நடத்தப்படும். மாமூலாய்க் கொடுக்கும் இனாம்களைத் தவிர வண்டிகளை இழுக்கும் மாடுகளை வண்டிகளில் பூட்டுவதில் இப்போதைவிட நேர்த்தியானதும் சுகமானதுமான விதத்தைப்பற்றி உத்தமமான யோசனை காட்டுகிறவர்களுக்கு ஒரு விசேஷ இனாமும் கொடுக்கப்படும். இச்சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்களைக் கேட்டு மற்ற விவரங்களை அறியலாம்.

தஞ்சாவூர் ஜில்லா பிரஹ்மஞாந கிளைச் சங்கங்களின் பெரிய சபை, நாளதுமீ 20, 21 தேதிகளில் 11-ம் முறை சீர்காழியில் நடத்தப்படும். மாதுஸ்ரீ ரான்ஸம் அம்மாள் அக்கிராசநம் வகிப்பார்.

பத்திராதிபர்.

355

பூர்ணசந்திரோதய விளம்பரம்.

சந்தாவிவரம்—வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil)	1-0-0
பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும்	0-6-0
மனிதனின் வம்சாவளியின் உண்மை	0-4-0
ஹிந்துமத தூஷண பரிகாரம்	0-4-0
Avvayar's Yoga aphorisms in English	0-4-0
தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	0-3-0
ஐதரேயோபநிஷத் ஷை	0-2-0
மௌநவாக்கு	0-2-0
சந்மார்க்கதீபம்	0-2-0
அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்)	0-1-0
டில்லி தர்பார் மஹோத்ஸவம்	0-1-0
வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்	0-1-0
ஏசுகிறீஸ்து என்பார் சரிதம்	0-0-6
தேவாலயம்	0-0-3
தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும்	0-0-3
இந்தியபுத்திரர்களின் சங்கம்	0-0-3
பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்)	0-0-3
பிரஹ்மஞாந சபையின் யந்திரம்	0-0-2
பிரஹ்மவித்யை	0-0-2
அஷ்டமி பிரதக்ஷிணம்	0-0-1
பிரஹ்மஞாந சபை	0-0-1

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும் தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு விஞ்ஞாபநம்.

ஆங்கிலத்தில் அருமையான ஞாந விஷயங்கள் பிரஹ்மஞாந சபையாரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தெரியாத தமிழர்களும் அவைகளை அறிந்து பயன்பெறும்படி, வெண்தாமரை இதழ் என்ற பெயருள்ள மாலிகையாக ஞாநநூல்கள் தமிழில் பிரசுரம் செய்வதாக உத்தேசித்து இப்போது மௌநவாக்கு, சந்மார்க்கதீபம் என்ற இரண்டு சிறுபுத்தகங்கள் வெளியிடப்பெற்றிருக்கின்றன. இவைகளின் விலை தனித்தனி 2 அணாதான். இனிமேலும் இம்மாதிரியான அநேக புத்தகங்கள் வெளிவரும். அவைகள் சீக்கிரத்தில் வெளிவரவேண்டுமானால், முக்கியமாக ஆங்கிலம் தெரியாத நமது நண்பர்கள் திரவியசகாயம் செய்யவேண்டுமெனப் பிரார்த்தனை.

ப. நாராயணன்,

பிரெஸிடெண்டு, பிரஹ்மஞாந சபை, மதுரை.

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } **ஸ்ரீ காசி.** { பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்.

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

வெண்பட்டு வேஷ்டிகள் :—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷகம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

முழம்.	அகலம்.	ரூ. முதல்.		வரை.	முழம்.	அகலம்.	ரூ. முதல்.		வரை
6	2½	7	,,	9	8	3	12	,,	18
6	3	10	,,	12	9	3	14	,,	20
7	2½	8	,,	12	10	3	15	,,	22
7	3	10	,,	14					

விலாஸம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

ஸ்ரீ பரமேஸ்வர திருவுருவப்படம்.

வர்ணத்துடன் போட்டோக்கிராப்பில்

எடுத்திருப்பதாகிய படம், சைவசமயிகளாகிய பக்தர்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் மடம் சத்திரமுதலிய இடங்களிலும் வைத்துப் பூசிப்பதற்குமிகச்சிறந்ததென்பது திண்ணம் இப்படம் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். தபாற்செலவு வேறு, படத்தின் அளவு 24 × 20, அங்குலம் உள் அளவு 17 × 13, படம் 1-க்கு கிரயம் ரூ 0—12—0.

சு. சந்திரசேகரப் பிள்ளை,
ஆர்டிஸ்டு & போட்டோகிராப்பர், அருந்தவம்புலம், கீர்மூலைபோஸ்டு,
திருத்துருப்பூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.